4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், உடுமலைப்பேட்டை

சாட்சியின் சாட்சியம் திரு. M. நம்பிராஜன், பி.ஏ., பி.எல்., 4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, உடுமலைப்பேட்டை அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

அ.வ.எண். 212/2017 நாள்: 05.08.2025 பி.வா.சா.3 – ரேணுகாதேவி

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, வாதி தரப்பு குறுக்கு விசாரணை -

1ம் பிரதிவாதி மணிமேகலை எனது கணவரின் உடன் பிறந்த சகோதரி. மணிமேகலை கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களை நான் பார்த்துள்ளேன். இந்த வழக்கில் சொல்லியுள்ள கிரைய ஒப்பந்த அசல் ஆவணத்தை பார்த்துள்ளேன். நான் மேற்படி அசல் ஆவணத்தை எனது வீட்டில் வைத்து பார்த்தேன். வீடு கட்டுவதற்கு ரூ.34 லட்சம் மதிப்புடைய வீடு கட்டி கொடுக்க வேண்டும் என்றும் அதில் அட்வான்ஸ் ரூ.12 லட்சம் கொடுத்ததாக எழுதியிருந்தது. மேற்படி ஒப்பந்தத்தில் லாவண்யா என்பவர் சாட்சி கையொப்பம் போட்டுள்ளார், வேறு ஒருவர் யார் என்று எனக்கு சரியாக தெரியவில்லை. மேற்படி ஒப்பந்தம் ஏற்பட்ட தேதியன்று தாவா சொத்து கார்பரேசன் வங்கியில் அடமானத்தில் இருந்தது என்று சொன்னால் சரிதான். எனது சகோதரர் நாகராஜுக்கு லாவண்யா, செல்வராஜ் ஆகியோருடன் வரவு செலவு உண்டு என்றால் சரிதான். எனது சகோதரர் நாகராஜ் மற்றும் அவரது மனைவி மணிமேகலை ஆகியோர்கள் இடம் வாங்கி வீடு கட்டி விற்கும் தொழில் செய்து வருகிறார்கள் என்றால் சரிதான். கடனை வீடு கட்டி விற்பதற்காக வாங்குவார்கள் என்று சொன்னால் சரியல்ல, சொந்த வீடு கட்டுவதற்கு அவர்கள் கடன் வாங்குவார்கள். தாவா சொத்தை பொறுத்து 1 ம் பிரதிவாதி அவருடைய தம்பி பெயருக்கு செட்டில்மெண்ட் ஆவணம் மூலம் எழுதி வைத்துள்ளார் என்றால் சரிதான். இந்த வழக்கு தாக்கல் செய்த பிறகு மேற்படி செட்டில்மெண்ட் ஆவணத்தை 1ம் பிரதிவாதி ஏற்படுத்தியுள்ளார் என்றால்

சரிதான். 1ம் பிரதிவாதி மற்றும் எனது சகோதரரும் சேர்ந்து வாங்கிய கிரைய ஆவணங்களில் நான் இதுவரை சாட்சி கையொப்பம் போடவில்லை. இந்த வழக்கு சம்பந்தமாகவும், செல்வராஜுடன் எனது சகோதரருக்கு ஏற்பட்ட வரவு செலவு சம்பந்தமாகவும் எனது சகோதரர் சொல்லி தான் தெரியும் என்றால் சரியல்ல, எனக்கு நேரடியாகவே தெரியும், நானும் என் சகோதரரும் ஓரே வீட்டில் தான் வசிக்கிறோம். இந்த வழக்கு தவிர மணிமேகலை மீது எத்தனை உரிமையியல் வழக்குகள் நிலுவையில் உள்ளது என்று என்னால் சொல்ல முடியாது. நான் பிரமாண பத்திரிக்கையில் உள்ள சங்கதிகள் பொய்யானவை, நான் எனது சகோதரர் மற்றும் அவர் மனைவிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சி விசாரிக்கப்பட்ட, சாட்சியின் சாட்சியம் தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, சாட்சியாலும் படித்து பார்க்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பு சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.

Sd/–M.Nambirajan.
4வது கூடுதல் மாவட்ட நீதிபதி,
உடுமலைப்பேட்டை.